செய்தி வெளியீடு **நாள்: 31.01.2026**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் கவியரசு கண்ணதாசன் நகர் மற்றும் மகாகவி பாரதி நகர் (முல்லை நகர்) பேருந்து நிலையங்கள் பிப்ரவரி மாதம் 10–ஆம் தேதிக்குள் மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சியின் அவர் கொண்ட அக்கறையின் காரணமாக வடசென்னை பகுதியா? என்று புருவத்தை உயர்த்திப் பார்த்தவர்கள், இன்றைக்கு நெற்றி சுருக்கத்துடன் ''வடசென்னையா இப்படி வளர்ச்சியடைந்து கொண்டுயிருக்கிறது'' என்று கேட்கும் அளவிற்கு
பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (31.01.2026) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரில் கட்டப்பட்டுவரும் பெரம்பூர் குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் முன்னேற்றப் பணிகளையும், எருக்கஞ்சேரி முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் இறுதிகட்டப் பணிகளையும், கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையத்தின் இறுதிகட்டப் பணிகளையும், மகாகவி பாரதி நகர் (முல்லை நகர்) பேருந்து நிலையத்தின் இறுதிகட்டப் பணிகளையும், மகாகவி பாரதி நகர், சென்ட்ரல் அவென்யூ சாலையில் கட்டப்பட்டுவரும் சமூக நலக்கூடத்தின் முன்னேற்றப் பணிகளையும், அதனைத் தொடர்ந்து துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் வால்டாக்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டுத் திடல், மாநகராட்சி அச்சகம் மற்றும் சமுதாய நலக்கூடம் என **"ஒருங்கிணைந்த வளாகம்"** முன்னேற்றப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்** வடசென்னை வளர்ச்சியின் அவர் கொண்ட அக்கறையின் காரணமாக, அவர் தீட்டிய திட்டத்தின் காரணமாக, **வடசென்னை பகுதியா? என்று புருவத்தை உயர்த்திப் பார்த்தவர்கள், இன்றைக்கு நெற்றி சுருக்கத்துடன் ''வடசென்னையா இப்படி வளர்ச்சியடைந்து கொண்டுயிருக்கிறது''** என்று கேட்கும் அளவிற்கு பல்வேறு பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, அதன் ஒரு சிறு பங்களிப்பாக சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமும் இந்தப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இன்று முல்லை நகர், கண்ணதாசன் நகர் பகுதிகளில் அமைந்துள்ள பேருந்து நிலையங்களை ஆய்வு செய்துள்ளோம். அதேபோல் எருக்கஞ்சேரியில் கட்டப்பட்டு வரும் பழைய நூலகத்தை புதுப்பிக்கும் பணிகளையும் பார்வையிட்டுள்ளோம். வியாசர்பாடி அம்பேத்கர் கலை கல்லூரி அருகில் அமையவுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்து நிறுத்தப் பணிகளையும் இன்று ஆய்வு செய்துள்ளோம்.

அதேபோல் இங்கு கட்டப்பட்டுள்ள மகாகவி பாரதி நகர் திருமண மாளிகை தொடர்பாக, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சென்னை புறநகர் பகுதிகளில் 12 திருமண மண்டபங்கள் கட்டப்படும்

என்று திட்டமிடப்பட்டது. அதில் இரண்டு திருமண மண்டபங்கள் இதுவரை திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஒன்று கொளத்தூரில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருப்பெயரில் அமைந்துள்ளது. மற்றொன்று திரு.வி.க. நகர் தொகுதியில் உள்ள சந்திரயோகி சமாதி சாலை பகுதியில் அண்ணல் அம்பேத்கர் பெயரில் அமைந்துள்ளது.

முன்பு பொருளாதார வசதி மிகுந்தவர்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலை இருந்ததை மாற்றி, சாதாரண மக்களும் குறைந்த வாடகையில் திருமணம் நடத்தும் வகையில் இந்த மண்டபங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. இன்று அந்த இரண்டு திருமண மண்டபங்களையும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** பொற்கரங்களால் திறந்து வைத்துள்ளார். இந்த மாதம் 13–ஆம் தேதிக்குள் மேலும் மூன்று திருமண மண்டபங்களைத் திறந்து வைக்க உள்ளார். கவியரசு கண்ணதாசன் நகர் மற்றும் மகாகவி பாரதி நகர் (முல்லை நகர்) பேருந்து நிலையங்கள் பிப்ரவரி மாதம் 10–ஆம் தேதிக்குள் மக்களின் பயன்பாட்டிற்கு நிச்சயமாக அர்ப்பணிக்கப்படும்.

இந்த ஆய்வில் நம்மோடு பங்கேற்று சிறப்பித்த சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய திரு.ஆர்.டி. சேகர் அவர்களுக்கும், எங்கள் துறையின் உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களுக்கும், மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.ரவி அவர்களுக்கும், டிஆர்ஓ திருமதி.இந்துமதி அவர்களுக்கும், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் இந்த மேம்பாட்டு பணிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக இந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.நேதாஜி யூ.கணேசன், நிலைக் குழுத்தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) திருமதி.சர்வஜெயா தாஸ் நரேந்திரன், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் திரு.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி. ஃபர்ஹத் பேகம், திருமதி.மு.இந்துமதி, எம்.டி.சி பொது மேலாளர் திரு.ராஜசேகர், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் கவிதா, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, திரு.மா.பாலமுருகன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified by PeoPleStore